முற்பகல் 11–30

3. 30–4–2019 ஆம் நாளன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தொடர்பாகக் கொடுத்துள்ள தீர்மானம் வலியுறுத்தப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம் இருங்கள், வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேரவைத் தலைவர் அவர்கள் தொடர்பாகக் கொடுத்துள்ள தீர்மானம் குறித்து, பேரவை விதி 68–ன்கீழ் அளிக்கப்பட்ட தீர்மானம், இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 179–ன்படியும், சட்டமன்றப் பேரவை விதி 69–ன்கீழும் 14 நாட்கள் முன்னறிவிப்பு காலம் முடிந்தவுடன் கூட்டப்பெறும் முதல் கூட்ட நாளில் அலுவல் பட்டியலில் சேர்க்கப்பெற வேண்டும் என்பதன் அடிப்படையிலும், 14 நாட்கள் முடிவடைந்த நிலையில் இத்தீர்மானம் பேரவைத் தலைவர் தொடர்புடையது என்பதாலும், இதுகுறித்த முடிவினை பேரவைதான் எடுக்க இயலும் என்பதாலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் 30–4–2019 ஆம் நாளிட்ட கடிதம் மற்றும் தீர்மானத்தினையும், 28–6–2019 ஆம் நாளிட்ட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் காணும் முடிவினையும் பேரவையின் முன்வைத்து, '30–4–2019 ஆம் நாளன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரால் கொடுக்கப்பட்ட தீர்மானம் வலியுறுத்தப்படவில்லை' என்பதை பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. அறிவிப்புகள்

(அ) 'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் இலக்கினை எய்திடும் வகையில் 9-1-2018 முதல் 6-12-2018 வரையிலான 33 நாட்களுக்கான மற்றும் 14-வது சட்டமன்றப் பேரவையின் 23-5-2011 முதல் 8-12-2014 வரையிலான 155 நாட்களுக்கான நடவடிக்கைக் குறிப்புகள் மற்றும் 14-வது சட்டமன்றப் பேரவையின் பேரவைத் தலைவரின் தீர்ப்புரைகள் மற்றும் குறிப்புரைகள் தொகுப்பு இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 'காகிதமில்லா சட்டமன்றம்' என்ற இலக்கை எய்திடும் பணிகளின் தொடர்ச்சியாக இன்று (1–7–2019),*

2019 ஜூலை 1] [பேரவைத் தலைவர்]

(i) *9–1–2018 முதல் 6–12–2018 வரையிலான 33 நாட்களுக்கான சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள்;*

(ii) *14–வது சட்டமன்றப் பேரவையின் 23–5–2011 முதல் 8–12–2014 வரையிலான, 155 நாட்களுக்கான நடவடிக்கைக் குறிப்புகள்; மற்றும்*

(iii) *14–வது சட்டமன்றப் பேரவையில் பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் மற்றும் மாற்றுத் தலைவர்களால் வழங்கப்பெற்ற தீர்ப்புரைகள் மற்றும் குறிப்புரைகளின் தொகுப்பு*

ஆகியவை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் வசதிக்காக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

தமிழகத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய குடிநீர்ப் பிரச்சினை குறித்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைய பேர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதுகுறித்து நான் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள்.*

தமிழகத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன், மாண்புமிகு